**அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் செயற்றிட்டம் - 2016**

அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆம் திகதிய 2624 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சாகவிருந்த தற்போதைய நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயற்திட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்குப் பொறுப்பாக உள்ளது. இலங்கையின் அரச நிதி முகாமைத்துவ முறைமையில் அரசிறை இடைவெளி மற்றும் வினைத்திறனை உயர்த்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,344.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.80 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,034.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30.80 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2010 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2013 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2017 ஒக்தோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 30.80 | 4,034.80 | 667.00 | 664.00 | 11.61 | 1,552.00 |
| இலங்கை அரசாங்கம் | 10.00 | 1,310.00 | 96.00 | 95.00 | 2.06 | 275.00 |
| | **40.80** | **5,344.80** | **763.00** | **759.00** | **13.67** | **1,827.00** |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 4,034.80 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 30.80 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 1,552.00 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 11.61 மில்லியன் அல்லது 37.69 சதவீதம் மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 06½ ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், மிகுதி 10 மாத காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 19.19 மில்லியன் ஒதுக்கீட்டு மீதியை கடன் வசதியின் முடிவு வரை பயன்படுத்தும் சாத்தியத்தன்மை மிகவும் தொலைவானதாகவுள்ளது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் ஸ்தாபிப்பு மற்றும் இயலுமை அபிவிருத்தி என்ற பெயரில் 02 பிரதான கூறுகளை செயற்திட்ட நடவடிக்கைகள் கொண்டுள்ளன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய கூறுகளின் கீழான நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகவல் முறைமை உட்கட்டமைப்பின் வழங்கல், ஒழுங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் தனிப்பயனாக்கல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் ரூபா 2,356.75 மில்லியனிற்குச் சமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 17.76 மில்லியன் தொகைக்கு 2013 ஒக்தோபர் 14 இல் வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 ஏப்ரல் 23 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீதான பௌதீக செயன்முன்னேற்றமானது உள்ளூர் பகுதி வலையமைப்பை நிறுவுதல், ஏற்கனவேயுள்ள கணக்கீட்டு முறைமையை தரமுயர்த்துதல் மற்றும் முறைமை வேண்டுகை குறிப்புரைகள் மற்றும் மாற்றங்கள் போன்றவற்றை விரைவாக்குதல் என்பவற்றிலுள்ள தாமதங்கள் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவானதாக இருந்தது. நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கட்டிடங்களின் புனர்நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் அமைச்சிற்கு இணைக்கப்பட்ட நிபுணர்களால் முறைமை வேண்டுகைக் குறிப்புரைகளை மீளாய்வு செய்வதற்கும் காலம் எடுத்தமை ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் ஸ்தாபிப்பு தொடர்பான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தாமதங்களை விளைவித்திருந்தது என இது தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) இயலுமை அபிவிருத்திக் கூறின் கீழ் பயிற்றுவிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிற்கான வருடாந்த இலக்குகள் ஆரம்பக் கட்டங்களில் செயற்திட்டத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்ட போதிலும் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினதும் அமைச்சின் அதிகார எல்லையின் கீழான ஏனைய திணைக்களங்களினதும் 82 சிரேஷ்ட உத்தியோகத்தர்களிற்கான வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் 200 பதவியணி உறுப்பினர்களிற்கான உள்ளூர் பயிற்சிகள் என்பன மாத்திரம் இயலுமை அபிவிருத்திக் கூறின் கீழ் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

ஒழுங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்பாடற்ற பரிசோதனைக்காக தனிப்பட்ட உத்தரவாதத்திற்கான ஒப்பந்தம் 2016 செப்தெம்பரில் ரூபா 14.97 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 3.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளிற்கு முரணாக ஆலோசனைகள் - 2007 இன் தெரிவு மற்றும் ஈடுபடுத்துதல் கிரய மதிப்பீடு மற்றும் இந்த நோக்கத்திற்கான பாதீடு என்பனவற்றை செயற்திட்டம் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) ஆலோசனை சேவைகளிற்காக சேவை வழங்குபவர்களை தெரிவுசெய்வதற்கான முறையான பெறுகைக் குழு வரிசை அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக பயிற்சியளித்தல் நோக்கங்களிற்காக ஆலோசனையாளர்களை தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தனியான குழுவொன்றின் ஒத்துழைப்பு பெறப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம் செயற்திட்டத்தால் நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் நடவடிக்கைகளிற்கான ஆலோசனையாளர்களை தெரிவுசெய்யும் நோக்கத்திற்காக மாத்திரமே நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரால் உரிய குழு நியமிக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்குறிப்பிட்ட குழுவின் அங்கீகாரத்தை

அடிப்படையாகக் கொண்டு அரசாங்க உரித்தாக்கப்பட்ட நிறுவனமொன்றாக மொறட்டுவ பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

செயற்திட்ட நடவடிக்கைகள் இலக்குகளிற்குப் பின்னோக்கியிருந்த போதிலும் அவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய தாமதக்கட்டணங்கள் ஒப்பந்ததாரருடனான பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்திட்டத்தால் விட்டுவிடப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், வரிசை அமைச்சு மற்றும் ஒப்பந்ததாரர் இருவராலும் செயற்திட்டத்தின் இலக்குகளை அடைவதிலுள்ள தாமதங்களிற்கு பங்களிக்கப்பட்டிருந்தன. ஆகையால் தனிப்பட்ட தரப்பினரின் பொறுப்புக்களை அவர்களின் தங்கியிருக்காமை காரணமாக அளவிட முடியாதிருந்ததுடன் ஒப்பந்ததாரர் மீது தண்டப்பணங்களை அறவிடுவதற்கான நடைமுறையாக இது இருக்கவில்லை.